# <u>மாதாந்த சபைக்கூட்ட அறிக்கை – பெப்ரவரி - 2023</u>

## <u>வவுனியா வடக்கு பிரதேச சபை</u>

இடம் :- மாநாட்டு மண்டபம், வவுனியா வடக்கு பிரதேச சபை.

காலம் :- 22.02.2023 (புதன்கிழமை)

நேரம் :- காலை 10.00 மணி

**இக்கூட்டத்தில் கீழ்வரும் கௌரவ உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.**

1. கௌரவ தவிசாளர் தர்மலிங்கம் பார்த்தீபன்
2. கௌரவ உறுப்பினர் ஜெயக்கொடி ஜெயரூபன்
3. கௌரவ உறுப்பினர் நடராஜா விநாயகமூர்த்தி
4. கௌரவ உறுப்பினர் சோமசுந்தரம் சத்தியேந்திரன்
5. கௌரவ உறுப்பினர் சிவஞானம் அருள்செல்வம்
6. கௌரவ உறுப்பினர் மயில்வாகனம் செந்தூரன்
7. கௌரவ உறுப்பினர் தேவராஜா ஜேசுதாகர்
8. கௌரவ உறுப்பினர் பரணீதரன் ஜமுனா
9. கௌரவ உறுப்பினர் உடகெதர ஆராச்சிலகே மஹிந்த குலரத்ன
10. கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோச்சனா
11. கௌரவ உறுப்பினர் கப்புவாகே விமலசிறி
12. கௌரவ உறுப்பினர் ஜயசுந்தர முதியன்சலாகே குணதிலக பண்டார
13. கௌரவ உறுப்பினர் ரஞ்சினி ஜெயகரன்
14. கௌரவ உறுப்பினர் உயன்வத்தேகெதர விஜேதுங்க
15. கௌரவ உறுப்பினர் ந.வ.ஆ.நி'ாந்தகாமினி விக்ரமபால,
16. கௌரவ உறுப்பினர் ரத்நாயக்க முதியன்சலாகே காந்திலதா,
17. கௌரவ உறுப்பினர் விஜேகோன் முதியன்சேலாகே எரந்தி குமாரி
18. கௌரவ உறுப்பினர் நா.ந.அருண சாந்த பிரியதர்சன
19. கௌரவ உறுப்பினர் பொன்னையா தேவராசா
20. கௌரவ உறுப்பினர் விநாயகமூர்த்தி சஞ்சுதன்
21. கௌரவ உறுப்பினர் நடனறதனி யோகநாதன்
22. கௌரவ உறுப்பினர் ஆறுமுகம் அகிலேஸ்வரன்

வவுனியா வடக்கு பிரதேச சபையின் ஐம்பத்தென்பதாவது சபைக்கூட்டமானது சபையின் மாநாட்டு மண்டபத்தில் 22.02.2023 ம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணியளவில் கௌரவ தவிசாளர் தர்மலிங்கம் பார்த்தீபன் அவர்களது தலைமையில் அகவணக்கத்துடன் ஆரம்பமானது.

கௌரவ தவிசாளா் தனது தலைமையுரையில், சபையின் கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினா்கள், செயலாளா், மொழிபெயர்ப்பாளர் மற்றும் சபை அலுவலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டார். தொடா்ந்து கௌரவ தவிசாளர் அவர்களால் கடந்த மாதம் நிறைவேற்றப்பட்ட தீா்மானங்கள் தொடா்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், முன்னேற்றங்கள் பற்றி தவிசாளரால் சபைக்கு தெளிவுபடுத்தப்பட்டது. பின்னா் கீழ் வரும் விடயங்கள் சபையினால் கலந்துரையாடப்பட்டு தீா்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**தீா்மான இல :- VNPS/2023/GM/02/59/01**

கூட்டத்தில் கலந்துகொள்ளாத உறுப்பினா்கள் தொடா்பில், சபையின் கௌரவ உபதவிசாளர் நாகலிங்கம் யோகராஜா, கௌரவ உறுப்பினர் பரமசிவம் பரத், கௌரவ உறுப்பினா் பிமல் தா்மதாச, கௌரவ உறுப்பினா் வீ.ஆ.நி'ாந்தி பிரதீபிகா குமாரி ஆகியோர் சுகவீனம் காரணமாக இன்றைய கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாதென அறிவித்துள்ளதன் அடிப்படையில் மருத்துவ காரணங்களுக்காக அவர்களது விடுமுறையை ஏற்றுக்கொண்டு அங்கீகரித்தல் என தீா்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோசனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பரணீதரன் ஐமுனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீா்மான இல :- VNPS/2023/GM/02/59/02**

கடந்த மாத கூட்டறிக்கை அங்கீகரித்தல் தொடா்பில், கடந்த 2023 ஜனவரி மாத கூட்டறிக்கையில் எவ்வித திருத்தங்களும் இல்லாத நிலையில் குறித்த கூட்டறிக்கையினை சரியென ஏற்று அங்கீகரித்தல் என தீா்மானிக்கப்பட்டது. இத்தீா்மானத்தை கௌரவ உறுப்பினர் நடராஜா விநாயகமூா்த்தி அவா்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினா் சசீந்திரன் இராஜசிலோசனா அவா்கள் வழிமொழிந்தாா். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீா்மான இல :- VNPS/2023/GM/02/59/03**

கடந்த மாத கணக்கறிக்கை அங்கீகரித்தல் தொடா்பில் 2023 ஜனவரி மாத கணக்கறிக்கை ஆராயப்பட்டது. இதன்போது வரவு - செலவு விடயங்கள் தொடா்பில் செயலாளா் அவா்களால் விளக்கம் அளிக்கப்பட்டது. இதனடிப்படையில் 2023 ஜனவரி மாத கணக்கறிக்கையானது சரியென ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இத்தீா்மானத்தை கௌரவ உறுப்பினர் நடராஜா விநாயகமூா்த்தி அவா்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினா் கப்புவாகே விமலசிறி அவா்கள் வழிமொழிந்தாா். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீா்மான இல :- VNPS/2023/GM/02/59/04**

கௌரவ உறுப்பினர் நடராஜா விநாயகமூா்த்தி அவர்களால் புதுக்குளம் குறிசுட்டகுளம் உள்ளக வீதி பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் பயன்படுத்தும் வீதி மழைகாலங்களில் போக்குவரத்துச் செய்யமுடியாதளவிற்கு நீர்மூடி நிற்கின்றது அதனால் இரண்டு பாலம் அமைக்கப் பயன்படும் குழாய்கள் கோரியுள்ளார் கௌரவ உறுப்பினா் ஜெயக்கொடி ஜெயரூபன் அவர்களால்

எமது அலுவலகத்திலுள்ள பழைய பேக்குகளை கேள்விப்பத்திரம் கோரப்பட்டு அதன் பின்னர் நீரை தேங்கவிடாது பாலம் அமைக்குமாறு கருத்துத்தெரிவித்தார் இதன்பின்னர் எமது அலுவலகத்திலுள்ள பழைய பேக்குகளை கேள்விப்பத்திரம் கோரப்பட்டு வழங்க தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் நடராசா வினாயகமூர்த்தி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் வினாயகமூர்த்தி சஞ்சுதன் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/02/59/05**

கௌரவ உறுப்பினர் விநாயகமூர்த்தி சஞ்சுதன் அவர்களால் சின்னடம்பன் வீதியில் பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் பயன்படுத்தும் வீதி மழைகாலங்களில் போக்குவரத்துச் செய்யமுடியாதுள்ளது அதனால் இரண்டு பாலம் அமைக்கப் பயன்படும் குழாய்கள் கோரியுள்ளார் கௌரவ உறுப்பினா் ஜெயக்கொடி ஜெயரூபன் அவர்களால் எமது அலுவலகத்திலுள்ள பழைய பேக்குகளை கேள்விப்பத்திரம் கோரப்பட்டு அதன் பின்னர் மழைநீர் தேங்காது பாலம் அமைக்குமாறு கருத்துத்தெரிவித்தார் இதன்பின்னர் எமது அலுவலகத்திலுள்ள பழைய பேக்குகளை கேள்விப்பத்திரம் கோரப்பட்டு வழங்க தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் நடராசா வினாயகமூர்த்தி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் வினாயகமூர்த்தி சஞ்சுதன் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/02/59/06**

எமது திணைக்களத்தின் நைனாமடு உப அலுவலகத்தின் அலுவலர் விடுதி கட்டடம் ஒன்றினை நைனாமடு அன்னை திரேசா பெண்கள் அமைப்பு தமது அலுவலகமாக பயன்படுத்துவதற்கு வாடகை அடிப்படையில் கோரியுள்ளனர், இவ் அலுவலர் விடுதி கட்டடத்தினை வாடகைக்கு விடவதற்காக தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் நடராஜா விநாயகமூர்த்தி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சிவஞானம் அருள்செல்வம் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/02/59/07**

எமது திணைக்களத்தின் நைனாமடு உப அலுவலகத்தின் அலுவலர் விடுதி கட்டடம் ஒன்றினை தபாலகமாக இயங்குவதற்கு தபால் திணைக்களம் வாடகை அடிப்படையில் கோரியுள்ளனர் இவ் அலுவலர் விடுதி கட்டடத்தை வாடகைக்கு விடவதற்காக தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் நடராஜா விநாயகமூர்த்தி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சிவஞானம் அருள்செல்வம் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/02/59/08**

சபையின் உத்தியோகத்தரான திரு.ஸ்.விநோத்ராஜ், திரு.கி.தினேஸ் ஆகியோர் இடருதவி கடன் கோரியுள்ளனர். அவர்களுக்கான இடருதவிக் கடனினை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இத்

தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர பரணீதரன் ஜமுனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோசனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/02/59/09**

எமது சபைக்கான 2023 ஆண்டு வருடாந்த செயலாற்றுகைத்திட்டம் தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் ஜெயக்கொடி ஜெயரூபன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சோமசுந்தரம் சத்தியேந்திரன் அவர்கள் வழிமொழிந்தார். இத் தீர்மானத்தினை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/02/59/10**

எமது சபைக்கான 2023 ஆண்டு வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் ஜெயக்கொடி ஜெயரூபன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சோமசுந்தரம் சத்தியேந்திரன் அவர்கள் வழிமொழிந்தார். இத் தீர்மானத்தினை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/02/59/11**

எமது பிரதேச சபையின் கனகராயன் குளம் ஆயள்வேத வைத்தியசாலைக்கு புதிய கணனி ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் ஜெயக்கொடி ஜெயரூபன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் வினாயகமூர்த்தி சஞ்சுதன் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/02/59/12**

எமது சபையின் பாவனையிலுள்ள அனைத்து வாகனங்களுக்குமான ஒயில் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோச்சனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பரணீதரன் ஜமுனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/02/59/13**

எமது சபையில் 02.01.1995 ஆம் ஆண்டு தொடக்கம் கடமையாற்றிய திரு.நா.கனகசிங்கம் மருந்துக்கலவையாளர் அவர்கள் 2005 ஆம் ஆண்டில் பதவி வெறிதாக்கல் செய்யப்பட்டுள்ளார். அவரது சேவைக்காலத்தில் அவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்தொகை ஒரு வருடக்கடன் ரூபா 18,325.52, பத்துமாதக் கடன் ரூபா 25,073.20, பண்டிகை முற்பணம் ரூபா 2,100.00, விசேட கடன் ரூபா 400.00, கடன் நிவாரண கடன் ரூபா 4,935.00 மொத்தமாக ரூபா 50,853.72 தொகையை

அறவீடுசெய்யப்படாமல் கணக்கு மீதியாக காட்டப்பட்டு வருகின்றமை ஆராயப்பட்டு குறித்தநபர் எங்குள்ளார் உயிருடன் இருக்கின்றாரா என்ற தகவல்களை அறியமுடியாமையை கருத்திற்கொண்டும் ஆவணங்கள் எவையும் இல்லாமையாலும் இத்தொகையை விலக்களிப்புச்செய்வதற்கு உரிய தொடர்பாடல் முறையூடாக கௌரவ ஆளுனரின் அனுமதியினைப்பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோச்சனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பரணீதரன் ஜமுனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/02/59/14**

புளியங்குளம் இளைப்பாறும் நிலையத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட இரும்புப் பைப்பை பயன்படுத்தி நெடுங்கேணி சந்தைக்கு நான்கு பக்கங்களிலும் மின்னொளி கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோச்சனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பரணீதரன் ஜமுனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/02/59/15**

நீண்டகாலமாக கணக்கறிக்கையில் காட்டப்பட்டு வரும் எமது சபையில் பணியாற்றிய திரு.ம.ஆரோக்கியநாதன் என்பவரின் இடருதவிக்கடன் நிலுவைத் தொகையாக ரூபா 43,550.00 அறவிட முடியாமலும் இதற்கான ஆவணங்களும் இல்லாமலும் காணப்பட்டு வருகின்றது. இது கணக்காய்வு ஐயவினாவிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது, எனவே இவரின் தொகையை விலக்கழிப்புச்செய்யத் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோச்சனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பரணீதரன் ஜமுனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/02/59/16**

நெடுங்கேணி நகர்ப்பகுதியில் அமைந்துள்ள எமது சபைக்குச் சொந்தமான நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பழுதடைந்துள்ளதால் அதனை திருத்துவதற்கும் அதற்கான கொடுப்பனவு வழங்குவதற்குமாக தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோச்சனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பரணீதரன் ஜமுனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/02/59/017**

2018 ஆம் ஆண்டு ஒப்பந்தம் செய்யப்பட்டு சின்னடம்பன் வீதிக்குப் பயன்படுத்துவதற்காக இறக்கப்பட்ட கற்கள் ஒப்பந்தம் நிறுத்தப்பட்டதால் கற்கள் அவ்வாறே இருக்கின்றன இதை மீழ ஒப்பந்தம் செய்து வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர்

நடராசா வினாயகமூர்த்தி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் வினாயகமூர்த்தி சஞ்சுதன் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/02/59/18**

ஆட்டோ உரிமையாளர் சங்கத்தினரால் நிலவாடகையை ரூபா 350.00 இலிருந்து குறைப்பது தொடர்பாக சபையிடம் கோரியதற்கமைவாக நிலவாடகையின் கட்டணதில் மாற்றமேற்படுத்தத் தேவையில்லை வாடகைத் தொகையை ரூபா 350.00 ஆகவே அறவிடத் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் மயில்வாகனம் செந்தூரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் விநாயகமூர்த்தி சஞ்சுதன் அவர்கள் வழிமொழிந்தார்.

நெடுங்கேணி மரக்கறிச் சந்தை LDSP PT II இறுதிக்கொடுப்பனவு தீர்மானத்திற்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டபோது கௌரவ உறுப்பினர் மயில்வாகனம் செந்தூரன் அவர்களால் இறுதிக்கட்டம் என்பது வேலைமுடியவில்லையா? வேலை முடியாது எவ்வாறு அனுமதி தருவது எத்தனை வீதம் என போடுங்கள் என்றார். என கேட்டார். கௌரவ உறுப்பினர் சோமசுந்தரம் சத்தியேந்திரன் அவர்களால் உங்கள் முதல் மதிப்பீட்டில் இப்போது நடக்கும் வேலைத்திட்டங்களும் அடக்கப்பட்டுள்ளதா? சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் குறைபாடுகள் கூறப்பட்டதாக நான் அறிந்தேன் எனக்கூறினார். கௌரவ தவிசாளர் அவர்களால் மதிப்பீட்டினை பார்த்துவிட்டு நீங்கள் கதையுங்கள் என்றார். கௌரவ உறுப்பினர் சோமசுந்தரம் சத்தியேந்திரன் அவர்களும், கௌரவ உறுப்பினா் பொன்னையா தேவராசா அவர்களும் மதிப்பீட்டினை சபையில் காட்டும்படி கூறினர். கௌரவ தவிசாளர் அவர்களால் மதிப்பீட்டினை தற்போது சமர்ப்பிக்க முடியாது எனக் கூறினார். இதன்பின்னர் கௌரவ உறுப்பினா்களின் வாதப்பிரதிவாதங்களின் பின்னர் கௌரவ உறுப்பினர் சோமசுந்தரம் சத்தியேந்திரன் அவர்கள் மதிப்பீட்டினை சபையில் சமர்ப்பிக்க வேண்டும் என்றவுடன் சபையின் செயலாளரால் மதிப்பீடு சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/02/59/19**

நெடுங்கேணி மரக்கறிச் சந்தை LDSP PT II இறுதிக்கொடுப்பனவு ரூபா 2,593,492.40 வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சோமசுந்தரம் சத்தியேந்திரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பொன்னையா தேவராசா அவர்கள் வழிமொழிந்தார்.

**தீர்மான இல :- VNPS/2023/GM/02/59/20**

கௌரவ உறுப்பினர் நடராஜா விநாயகமூர்த்தி அவர்களின் கோரிக்கைக்கு அமைய ஆலங்குளம் சுடலை வீதிக்குச் செல்லும் வீதி தண்ணீர் மூடிப்பாய்வதால் அவ்வீதிக்கு இரண்டு போக்குகள் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் நடராசா வினாயகமூர்த்தி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் வினாயகமூர்த்தி சஞ்சுதன் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

கௌரவ உறுப்பினா் ஜெயக்கொடி ஜெயரூபன் அவர்களால் கனகராயன்குளத்தில் அமைத்துக்கொடுக்கப்பட்ட தற்காலிக கொட்டகை எதனடிப்படையில் முன்னுரிமைப்படுத்தப்பட்டு தெரிவுசெய்து அமைத்துக்கொடுக்கப்பட்டது நிறைய குடும்பங்களுக்கு தற்காலிக கொட்டகை வழங்கவேண்டியவர்கள் உள்ளனர் ஆனால் இக்குடும்பத்தை மட்டும் முன்னுரிமைப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டதற்கான காரணத்தை எனக்கேட்டார். கௌரவ தவிசாளர் அவர்களால் வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தரின் தரவின் அடிப்படையில் வீடில்லாதவருக்கு பழைய பொருட்களைக்கொண்டு அமைத்துக்கொடுக்கப்பட்டது இதில் அலுவலகம் தொடர்புபடவில்லை வீடில்லாதவருக்கு பழைய பொருட்களைக்கொண்டு அமைத்துக்கொடுக்கப்பட்டது என்றார். கௌரவ உறுப்பினா் ஜெயக்கொடி ஜெயரூபன் அவர்களால் வீடில்லாதவர்களுக்கு செய்துகுடுங்கள் அதில் எந்தமாற்றுக்கருத்தும் இல்லை பழைய பொருட்களானாலும் சபையின் சொத்தானால் சபை அனுமதியுடன் வழங்குமாறு கூறினார்.

தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களால் எமது சபைக்கு மிகவும் பொருத்தமான செயலாளர் வருகைதந்துள்ளதால் எமது நிர்வாக நடைமுறைக்கு மிகவும் ஒத்துளைப்பாக உள்ளது உதாரணமாக வீதியோரங்களில் அங்காங்கே வைத்து வியாபாரத்திலீடுபட்டுவந்த மீன் வியாபாரிகளை ஒரே இடத்தின்கீழ் கொண்டுவந்து வியாபாரத்தலீடுபட வைத்துள்ளோம். அத்துடன் சந்தையை ஒரு நடமாடும் மதுபானசாலையாக மாற்றநினைப்போர் மீது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. கௌரவ உறுப்பினர் சோமசுந்தரம் சத்தியேந்திரன் அவர்களால் சந்தையில் மக்கள்மத்தியிர் பேசப்படும் கெட்டவார்த்தைகளுக்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். கௌரவ தவிசாளர் அவர்களால் குறிப்பிட்ட நாட்களுக்கு முன்னர் சந்தையில் இருவருக்கிடையே கைகலப்பில் ஈடுபட்டனர் அவர்களை கடிதம்மூலம் இடைநிறுத்தியுள்ளோம் என்றார்.

தொடா்ந்து ஏனைய விடயங்கள் ஏதும் இல்லாமை காரணமாக நன்றியுரையுடன் பிற்பகல் 2.10 மணியளவில் கூட்டம் நிறைவடைந்தது.

…………………

செயலாளா்,
வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி.

………………….

தவிசாளா்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.
நெடுங்கேணி.